## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர்

# உதயநிதி ஸ்டாலின் தமது பிறந்த நாளான நேற்று பங்கேற்று மகிழ்ந்த உணர்வு மிகு உற்சாகக் காட்சிகள்!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி சென்னை வேப்பேரி பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி சி.ஐ.டி. காலனி இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் திருமதி ராஜாத்தி அம்மாள், தயாநிதி மாறன் எம்.பி. உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்த நாளையொட்டி சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள இனமான பேராசிரியர் அவர்களின் இல்லத்திற்குச் சென்று அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சி.ஐ.டி. காலனி இல்லத்தில் திருமதி ராசாத்தி அம்மையாரிடம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துப் பெற்றார்.



திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களிடம் தனது பிறந்த நாளையொட்டி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துப் பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024), தனது பிறந்தநாளையொட்டி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2024) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர் பெருமக்கள், மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்த நாளையொட்டி சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் ஏற்பாட்டில் கழகத்தின் 100 மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி, அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றார். மேலும், கல்லூரி மாணவ – மாணவியர் 250 பேருக்கு கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், 50 மகளிர் சுய உதவிக்குழுக்கள் 100 திருநங்கைகளுக்கு உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் என சுமார் 1400 பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.